**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம்: | **20/07/2024** | முதல் | **24/07/2024** |
| அறிக்கை எண் : | **058/ 2024** | வெளியீட்டு நாள்: | **19/07/2024** | | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.07.2024 **முதல்** 18.07.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-07-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/07 | 15/07 | 16/07 | 17/07 | 18/07 | **தேதி** | **நாள்-1** 20/07 | **நாள்-2** 21/07 | **நாள்-3** 22/07 | **நாள்-4** 23/07 | **நாள்-5** 24/07 |
| 0.0 | 0.1 | 0.6 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 33 | 35 | 34 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 36 | 36 | 36 |
| 25 | 25 | 24 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 6 | 8 | 7 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 5 | 5 |
| 75 | 80 | 82 | 72 | 72 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 72 | 72 | 70 | 70 | 70 |
| 76 | 80 | 51 | 52 | 54 | | 56 | 56 | 54 | 54 | 54 |
| 3 | 3 | 3 | 1 | 2 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 25 | 26 | 25 | 15 | 15 |
| தெற்கு | தெற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **தெற்கு** | **மேற்கு** |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 15 முதல் 26 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(19ஜூலை-01 ஆகஸ்ட் 2024):**

**மழைப்பொழிவு :**

19-07-2024 - 25-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

26-07-2024 - 01-08-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-8-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-08-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 15 முதல் 26 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி, புடலங்காய், வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு வேலைகளுக்கு தயார் ஆகும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல் மிளகாய், கால்நடை.**

**நெல்:**

ஆடிப்பட்டம் மானாவாரியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பாக ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் 16 மணி நேரம் உலரவிட்டு விதைப்பை மேற்கொள்ளவும்.

இவ்வாறு செய்வதனால் விதை கடினத் தன்மையுடன் மண்ணில் போதுமான ஈரம் கிடைத்த பின்பு முளைத்து வளரும் தன்மையைப் பெறும்.

இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்பு திறனும் வளர்ச்சியும் இளம் நாற்றுகள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும்.

**மிளகாய்:**

நிலவும் பருவச் சூழ்நிலையில் மிளகாய் பயிரில் களை கட்டுப்பாடு முறைகளை பின்பற்றுதல் மிகவும் அவசியமாகும். மிளகாய் பயிர் நாற்றுக்கள் நட்ட 3வது நாள் ஒரு எக்டருக்கு 1 கிலோ பென்டிமெத்திலின் மருந்தை 500 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து சீராக கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

நட்ட 45வது நாள் மண் அனைத்து கையால் களை எடுக்க வேண்டும்.

மிளகாயில் 45 செ.மீ என்ற அளவில் வரிசைக்கு வரிசை இடைவெளி விட்டு ஊடுபயிராக கொத்தமல்லி அல்லது சின்ன வெங்காயத்தை இரு வரிசைக்கு மத்தியில் வளர்த்து களைகளைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் உபரி வருமானமும் பெறலாம்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையால் தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க, 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

இந்த மருந்து வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கண்டிப்பாக உள்ளே கொடுக்க கூடாது.